## 200 தொகுதிகளில் வென்று

# தி.மு.க.தான் மீண்டும் ஆட்சி அமைக்கும்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, ஏப்.28 - தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அளித்த பேட்டி வருமாறு:-

இந்த தேர்தலில் கண்டிப்பாக 200 தொகுதிகளில் நாங்கள் வெற்றி பெறுவோம். நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றதை போல் சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி கிடைக்கும்.



**கேள்வி:** நிறைய பெண்கள் விசில் சின்னத்துக்கு வாக்களித்தது போன்ற தகவல்கள் வெளியாகி வருகிறதே?

**பதில்:** திராவிட மாடல் அரசின் திட்டங்களை பெற்றவர்கள், அரசு திட்ட பயனாளிகள் அனைவரும் தி.மு.க.வுக்கு வாக்களித்து உள்ளனர்.

அரசாங்கத்தால் பயனடையாத ஒரு சிலர் மட்டும் விசிலுக்கு வாக்களித்து இருக்கலாம். குறிப்பாக அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர் அணி ஓட்டுக்கள் தான் விசிலுக்கு சென்றிருக்கும். தி.மு.க. ஓட்டு பிரியவில்லை.

அப்படியே கணக்கு போட்டு பார்த்தாலும் புதிய வாக்காளர்கள் 19 லட்சம் பேர்தான் உள்ளனர். இதில் 10 லட்சம் பேர் விசிலுக்கு வாக்களித்திருந்தாலும் மீதி 9 லட்சம் ஒட்டு தி.மு.க.வுக்கு தான் விழுந்திருக்கும்.

1971 தேர்தலில் தி.மு.க. 2-வது முறையாக வெற்றி பெற்று கலைஞர் 2-வது முறையாக முதல் அமைச்சர் ஆனதைப்போல் இந்த தேர்தலிலும் தளபதி மு.க.ஸ்டாலின் 2-ஆவது முறையாக 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று முதல் - அமைச்சராகி ஆட்சி அமைப்பார். இப்படித்தான் தேர்தல் முடிவு அமையும்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறினார்.

---

## ஆலந்தூர் மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம் – கிரசெண்ட் பொறியியல் கல்லூரி இணைந்து நடத்தும்

# ‘நவீன இலக்கியங்கள்: பன்முகப் பார்வை’ பன்னாட்டுக் கருத்தரங்கம்!

### நீதியரசர் அக்பர் அலி – கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஏப்.28- சென்னை, கிரசென்ட் பொறியியல் கல்லூரியும், கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையமும் இணைந்து நடத்தும் ‘நவீன இலக்கியங்கள்: பன்முகப் பார்வை” - பன்னாட்டுக் கருத்தரங்கம் இன்று (28.4.2026) காலை 10 மணிக்கு கிரசென்ட் இன்ஸ்டிட்யூட் ஆப் சைன்ஸ் & டெக்னாலஜி கல்லூரியில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சென்னை நீதிமன்ற மேனாள் நீதியரசர் அக்பர் அலி, ரசியா தமிழ்ச் சங்கத் தலைவர் சாமியப்பன் சேகர், பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., ஈராக் தமிழ்ச் சங்கத் தலைவர் ச.சாதிக் பாஷா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நன்றியுரையை மோ.பாட்டழகன் கூறுகிறார்.

---

## உத்திரமேரூர் – காஞ்சிபுரம் – மதுராந்தகம் – செய்யூர் சட்டமன்றத் தொகுதிகளில்

# தேர்தல் பணியாற்றிய கழக - கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு நன்றி!

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!

காஞ்சிபுரம், ஏப்.28- காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் அடங்கிய உத்திரமேரூர், காஞ்சிபுரம், மதுராந்தகம், செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பணியாற்றிய தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.



இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கழக வேட்பாளராக போட்டியிட்ட நான் (க.சுந்தர் எம்.எல்.ஏ.) உதயசூரியன் சின்னத்தில் எட்டாவது முறையாக போட்டியிடுகிறேன்.

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளராகிய க.சுந்தர் எனக்காக தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் அனைவரும் கண் துஞ்சாது உத்திரமேரூர் தொகுதி வாக்காளர்களை சந்தித்து வாக்கு சேகரித்தனர். அப்போது கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சாதனைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறி வாக்கு சேகரித்தனர்.

இத்தொகுதி எப்போதும் தி.மு.க. கோட்டை என்பதினை இத் தேர்தலிலும் நிரூபிக்கும் வண்ணம் கருத்து கணிப்புகளும் வெளிவந்துள்ளன.

அதே போன்று காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் நித்யா சுகுமாரையும், மதுராந்தகம் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் அமலு பொன் மலர்க்கும், செய்யூர் தொகுதியில் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் சிந்தனைச் செல்வன் அவர்களையும் ஆதரித்து கண் துஞ்சாது தேர்தல் பணி மேற்கொண்ட கழக சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் தோழர்கள் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தோழர்கள் உள்ளிட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## தமிழ்நாடு விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சி சார்பில் – இன்று

# சர்வதேச தொழிலாளர்கள் நினைவு நாளையொட்டி கருத்தரங்கம்!

### பொன்குமார் – முக்கிய பிரமுகர்கள் சிறப்புரை!

சென்னை, ஏப். 28 - தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர் கட்சி தலைவர் பொன் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பாதுகாப்பில்லாத பணியின் காரணமாக உலக அளவில் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் விபத்தின் காரணமாக தங்களுடைய இன்னுயிரை இழக்கின்றனர். கை, கால், கண்களை இழந்து ஊனமாகின்றனர்.

இந்த நிலையை மாற்றுவதற்கு பணியிடப் பாதுகாப்பு என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும். தொழிலாளர்களுக்கு பணியிட பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது ஒவ்வொருவரின் கடமை என ILO வலியுறுத்துகிறது.



இப்படி பாதுகாப்பற்ற பணியின் காரணமாக பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களை நினைவு கூர்ந்து, எதிர்காலத்தில் இந்த நிலையை தவிர்த்து, பாதுகாப்பானப் பணியை உறுதி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் மன்றம் ஏப்ரல் 28ஆம் தேதி உலகத் தொழிலாளர்கள் நினைவு நாளாக அறிவித்துள்ளது.

அந்த நாளை உலகம் முழுவதும் பேரணி, பொதுக் கூட்டம், கருத்தரங்கு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் கொண்டாடி வருகின்றன. அன்றைக்கு தொழிலாளர்கள் பாதுகாப்பான பணிக்கான உறுதியை ஏற்பார்கள்.

அந்த அடிப்படையில் இன்று (ஏப்ரல் 28) தொழிலாளர் நினைவு நாளை தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி மற்றும் தமிழகக் கட்டடத் தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில் கருத்தரங்கு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் தலைவர் பொன் குமார் உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு பணியிடப் பாதுகாப்பு குறித்து பேச உள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# டெல்லியில் - 110 டிகிரி வெயில் பதிவால் மஞ்சள் ‘அலர்ட்’!

புதுடெல்லி, ஏப். 28 - தலைநகர் டெல்லியில் 42.8 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ள நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தியுள்ளது. தலைநகர் டெல்லியில் இந்த ஆண்டின் அதிகபட்ச வெப்பநிலையாக நேற்று முன்தினம் 42.8 டிகிரி செல்சியஸ் (109.04 டிகிரி பாரன்ஹீட்) பதிவாகியுள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவலின்படி, நகரின் பல பகுதிகளில் 42 முதல் 44 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் நிலவுவதால் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த வெயில் தாக்கம் வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால், முதல்வர் ரேகா குப்தா தலைமையிலான அரசு ‘வெப்ப அலை நீண்டகால திட்டம் 2026’ஐ ஆய்வு செய்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, மருத்துவமனைகளில் குளிர்ச்சியான அறைகள் மற்றும் கூடுதல் படுக்கை வசதிகள் தயார் செய்யப்பட்டுள்ளன. மேலும், பொதுமக்களின் தாகத்தைத் தீர்க்க தானியங்கி குடிநீர் இயந்திரங்கள் மற்றும் தண்ணீர் லாரிகள் ஈடுபடுத்தப்பட உள்ளன. பள்ளிகளில் மாணவர்களுக்கு முறையான இடைவெளியில் தண்ணீர் குடிப்பதை நினைவூட்டும் ‘வாட்டர் பெல்’ முறை அமல்படுத்தப்பட உள்ளது. வெயிலின் தாக்கம் அதிகம் உள்ள மதிய நேரங்களில் வெளிப்புற வேலைகளைத் தவிர்க்கவும், தொழிலாளர்களுக்கு முறையான நிழற்குடை வசதிகள் மற்றும் உப்பு சர்க்கரை கரைசல் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏற்பட்ட குளறுபடிகள் மீண்டும் நடக்காமல் இருக்க, பேரிடர் மேலாண்மை ஆணையம் வானிலை மையத்துடன் இணைந்து உடனுக்குடன் தகவல்களைப் பகிரத் திட்டமிட்டுள்ளது.

---

# குறள் நெறியில் தளபதி ஸ்டாலின்!




### தலைமைப் பண்பு

தூங்கா வினைசெயும் யார்கொல்? தலைவன்தன்
நீங்கா மனச்சிறையின் நில்.

தலைமைமனத்திட்பம்கொள்கைவினை நான்கும்
கலைஞர் பயிற்சியாற் காண்.

வீழ்ந்தாலும் வீழ்வார் விதைபோல; மக்கள்தம்
வாழ்வைஆல் தாங்கும்விழுது.

வல்லிடர் நீக்கி வழிகாட்டும் எம்தலைவன்
சொல்லேறா மென்பதைச் சொல்.

மொழி, இனம் நாடென்ற மூன்றும் உயிர்தன்
விழிப்பாவை அன்னவாம் வழக்கு.

அமைப்புக்கண் தேர்தல்வேர் ஆழ்காட்டும்; என்றும்
சுமைகழகம் தாங்கூஉம் தூண்.

என்செயும் வன்பகை? தொல்படைத்த லைவனிவன்
பின்தூங்கி முன்எழுத லால்.

அலைகடல் தோற்கும்; அடைமழை நாணும்
தலைவன்தன் ஆள்வினைச் சான்று.

அறிக;பே ராற்றல் அறிக; அறிந்தும்
அறிக தளபதியார் அன்பு.

கடமைகண் ணீஇயம் கட்டுப்பா டென்றே
உடைய கழகத்த வர்க்கு.

### இறைமாட்சி

வடுக்கள் உடல்தாங்கி வாழும்நீள் தென்னை
கொடுக்கும் பயன்போ லவர்.

நாளு முழைக்கும் நலத்தேனீ; யார்மாட்டும்
ஆளுந் தகைமையாற் காண்.

சூழும் குழுதேர்ந்து ஞாலப் பணிசெய்வான்
ஆளும் தலைவ னழகு.

பல்கும் உறுப்பினிடர் போக்கூஉம் வாழ்த்தலைவன்
நல்கும் கழகத்தே நாடு.

குடிகாக்கும் நெஞ்சினாய்க் குன்றேறி நிற்பான்
மடியின்மை கொண்ட மதிக்கு.

யாக்கை உயிர்கலந் தன்ன தளபதிதம்
நோக்க மியக்கத் தொடர்பு.

ஓவா துழைத்துநின் றூக்கும் இயக்கத்தான்
சாவா உடம்பின் மருந்து.

களைப்புறா தாற்றும் கடமை; இயக்கம்
களைச்செடி தோன்றா வயல்.

வேர்வை வழிய வினையாற்றும் எந்தலைபோல்
பாரிடை யார்தாம் பகர்?

தேர்ந்தறியும் பல்லாற்றான் நன்னோக்கம் கட்சிக்கு
வேர்பிடித்த மண்ணின் விசை.

### படைச் செருக்கு

வல்லிடர் வந்தாக்கால் வண்குழையான் எஞ்ஞான்றும்
கல்லெறி வீழாதான் குன்று.

துணிவும் துணிபுசே ராற்றலு முண்மை
அணியறிந்து நிற்றற் கடன்.

தார்வேந்தன் கூர்வேல்வாள் தொண்டர்
படைச்செருக்கால்
போர்கண்டஞ் சாதவர்க் கு.

கழல்தொண்டர் மாந்தருயிர் காப்பாற்றும்; ஒட்பம்
கழகத்தைப் பேணும் குறிப்பு.

போர்நின்று நேர்வெல்வர் தொண்டர்; படைச்செருக்கும்
தார்வேந்தன் கொண்ட தலைக்கு.

மண்தின்னும் ஊனிருந் தென்பயன்? தாய்மைக்கண்
தொண்டாற்றா வுள்ளம் பெறின்.

கழகத்தில் வாழ்ந்தானைக் கல்காட்டும்; காட்டா
வழுவினனைத் தூற்றும் உலகு.

இடும்பை வருங்கால் இடம்பெயரா நெஞ்ச
உடைமையுள் வைக்கப் படும்.

வலியறிந்து தக்கது வீழ்த்தும் திறத்தால்
புலியது போற்றும் புகழ்.

காலத்து நலங்கருதிக் கூர்செய்யும் அன்னவன்
ஞாலத்துக் கைதேர்ந்த நாடு.



- கவிஞர் தமிழ்தாசன்

தி.மு.க. தீர்மானக்குழுத் தலைவர்

### படைமாட்சி

உடல்பொரு ளாருயிர் ஒன்றாம்; கழக
உடன்பிறப்பு என்னும் உயிர்க்கு.

நன்னோக்காற் கூடும் நெறியான் கழகந்தன்
முன்னேற்றங் காணு முயல்.

மக்கள் நலனாடும் மாண்புசால் ஓரியக்கம்
தக்கதா யெண்ணத் தகும்.

எள்ளற்க தொண்டரை; எல்லாருள்அன்னார்க்கே
அல்லவை செய்யாமை நன்று.

உயிரினு மோம்புதல் ஒண்கொள்கை ஏற்பர்
நயத்தக்க தொண்டர் தமக்கு.

இடர்வந்த கண்ணும் தடம்பிறழாத் தோழன்
கடன்செய்த மூத்த மகன்.

ஒன்னாரும் தம்தலை தாழ்வர்; தளபதியார்
மென்நெஞ்சின் மாண்பில் மகிழ்ந்து.

இலமென்று நாளும் இருந்திடான்; மக்கள்
நலம்படும் எண்ணத்து நோக்கு.

மடியின்மை கொண்டொழுகும் மாசற்றான் நோக்கம்
குடிகாக்கும் ஆற்றற் களம்.

தலைமைக்கண் பற்றூம்உம் தன்னியக்கப்பற்றும்
மலைநிகர்கொண்டமிடுக்கு.